### ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில்

# பெண்கள் பாதுகாப்புக்கான புகார் கமிட்டி செயல்படுகிறதா?

## மக்களவையில் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்விக்கு இணை அமைச்சர் பதில்!



புதுடெல்லி, ஜுலை 29 -

ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில் பெண்களின் பாதுகாப்புக் கான Internal Complaints Committees பற்றிய கேள்வி களை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனி மொழி கருணாநிதி ஜுலை 28 ஆம் தேதி மக்க ளவையில் எழுப்பினார்.

"பல்கலைக்கழக மானி யக் குழு (யுஜிசி) விதிமுறை கள் மற்றும் பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் தடை மற்றும் தீர்வுச் சட்டம் (2013) வழி காட்டுதல்களின் கீழ் ஒன் றிய அரசின்

மத்திய பல்கலைக்கழ கங்களில் Internal Complaints Committees எனப்படும் உள் புகார் குழுக்களை (ஐசிசி) நிறுவுவது கட்டாயம் ஆக் கப்பட்டுள்ளதா?

அப்படியென்றால், ஐ.சி.சி.களை அமைத்த மத் திய பல்கலைக்கழகங்க ளின் விவரங்கள் என்ன? விதிகள், வழிகாட்டுதல்க ளின்படிதான் குழுக்கள் அமைக்கப்பட்டதா, அக் குழுக் களின் உறுப்பினர் கள் பற்றிய விவரங்கள் என்ன?

மேற்கண்ட வழிகாட்டு தல்கள் மற்றும் சட்டத்தை கண்டிப்பாகப் பின்பற்று வதை உறுதி செய்ய அர சாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மத்திய பல்கலைக் கழ கங்களில் அமைக்கப்பட்ட ஐ.சி.சி. குழுக்களின் செயல் பாடுகள் பற்றி அரசாங்கம் மதிப்பீடுகள் அல்லது தணிக் கைகளை நடத்தியதா? இல்லையென்றால், அதற் கான காரணங்கள் என்ன?" ஆகிய கேள்விகளை கனி மொழி கருணாநிதி எம்.பி. கேட்டிருந்தார்.

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய கல்வி அமைச்சகத் தின் இணையமைச்சர் டாக்டர் சுகந்தா மஜும்தர் அளித்துள்ள பதிலில்,

"பணியிடத்தில் பெண் கள் மீதான பாலியல் துன்பு றுத்தல் தடை மற்றும் தீர் வுச் சட்டம், 2013 மற்றும் பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைகள், 2015 ஆகியவற்றின் கீழ் In ternal Complaints Committees எனப்படும் உள் புகார் குழுக்களை மத்திய பல்க லைக் கழகங்களில் நிறுவு வது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

ஒன்றிய கல்வி அமைச்ச கத்தின் கீழ் உள்ள அனைத்து மத்திய பல்க லைக்கழகங்களும் சட்டம் மற்றும் யு.ஜி.சி. வழிகாட்டு தல்களுக்கு இணங்க ஐ.சி. சி.களை அமைத்துள்ளன. பரிந்துரைக்கப்பட்ட விதி முறைகளின்படி, ஐ.சி.சி. யின் தலைமை அதிகாரி யாக ஒரு மூத்த பெண் ஆசிரியர், இரண்டு ஆசிரி யர் உறுப்பினர்கள் மற்றும் இரண்டு ஆசிரியர் அல்லாத ஊழியர்கள், மூன்று மாண வர் பிரதிநிதிகள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் (என்ஜிஓக்கள்) இருந்து ஒரு உறுப்பினர் இருக்க வேண் டும். மொத்த உறுப்பினர்க ளில் குறைந்தது பாதி பேர் பெண்களாக இருக்க வேண் டும்.

இந்த உள் புகார் குழுக் கள் திறம்பட செயல்படு வதை உறுதி செய்யும் பொருட்டு... புகார்கள் பதிவு செய்தல், பாலின சமத்துவம் பற்றிய ஆய்வு ஆகியவற்றுக்காக சக்ஷம் (SAKSHAM ) போர்டல் ஏற்ப டுத்தப்பட்டுள்ளது.

உயர்கல்வி நிறுவனங் களில் பெண்களுக்கு பாது காப்பான மற்றும் உறுதி யான சூழலை உறுதி செய்வதற்காக புகார்களை தெரிவிக்கவும், வழிகாட்டு தல்களைப் பெறவும், இது தொடர்பான ஆலோசனை களைப் பெறுவதற்கும் கட்டணமில்லா தொலை பேசி எண் அமைக்கப்பட் டுள்ளது.

புதிய கல்விக் கொள்கை 2020 இன் அடிப்படையில் இவை உருவாக்கப்பட் டுள்ளன" என்று ஒன்றிய கல்வித் துறை இணைய மைச்சர் குறிப்பிட்டுள் ளார்.



திருச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தினமலர் பங்குதாரரும், திருச்சி – வேலூர் பதிப்புகளின் ஆசிரியருமான ஆர்.ராமசுப்புவின் 61வது பிறந்த நாளை முன்னிட்டு அவரை நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார் உடன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், பொருளாளர் துரைராஜ், குடமுருட்டி சேகர் ஆகியோர் உள்ளனர்.

### திருச்சியில் – நாளை

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ ஆலோசனைக் கூட்டம்!

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!



டெல்டா பகுதிகளிலுள்ள மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பொறுப்பு அமைச்சர்கள் - தொகுதிப் பார்வை யாளர்களுடன் "ஓரணியில் தமிழ்நாடு" தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை (30.07.2025 - புதன்கிழமை) காலை 10 மணியளவில் திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட மாவட்டச் செய லாளர்கள், பொறுப்பு அமைச்சர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **கே.என்.நேரு**
கழக முதன்மைச் செயலாளர்
தி.மு.க.

### தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி வழக்கில் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக

# குடியரசுத் தலைவர் மூலம் தாக்கல் செய்த மனுவை திருப்பி அனுப்ப வேண்டும்!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு பதில் மனு தாக்கல்!

புதுடெல்லி, ஜுலை 29-

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவி வழக்கில் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக குடியரசுத் தலைவர் மூலம் தாக்கல் செய்த மனுவை திருப்பி அனுப்ப வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு பதில் மனு தாக்கல் செய்துள்ளது.

சட்டமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட மசோதாக்க ளுக்கு அனுமதி அளிக்கா மல் தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி கிடப்பில் வைத்த தற்கு எதிராக தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கில் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், ஆளு நர்கள் அனுப்பி வைக்கும் மசோதாக்கள் மீது ஜனாதி பதி 3 மாதங்களுக்குள் முடி வெடுக்க வேண்டும். 3 மாதங்களுக்குள் முடிவெ டுக்காத பட்சத்தில் அதை எதிர்த்து மாநில அரசுகள் உச்சநீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்ய முடி யும் என முதன்முறையாக குடியரசு தலைவருக்கு காலக்கெடு நிர்ணயித்தது உச்சநீதிமன்றம். இதை தொடர்ந்து, ஆளுநர்கள் மற்றும் குடியரசு தலைவ ருக்கு காலக்கெடு விதித்தது தொடர்பாக உச்சநீதிமன் றத்திடம் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு 14 கேள்வி களை எழுப்பினார்.

இதனை விசாரித்த தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் அடங்கிய 5 நீதிபதிகள் அடங்கிய அரசி யல் சாசன அமர்வு, "குடிய ரசுத் தலைவர் எழுப்பிய 14 கேள்விகள் தொடர்பாக ஒன்றிய அரசு மற்றும் அனைத்து மாநில அரசுக ளும் ஒரு வாரத்தில் கருத்து தெரிவிக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்து, இந்த வழக்கை ஜுலை 29ஆம் தேதிக்கு ஒத்திவைத்தது.

இந்நிலையில் உச்சநீதி மன்றத்தில் தமிழ்நாடு அரசு மனுத்தாக்கல் செய்துள் ளது. அதில் தமிழ்நாடு ஆளு நர் ஆர்.என்.ரவி வழக்கில் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக குடியரசுத்தலைவர் மூலம் தாக்கல் செய்த மனுவை திருப்பி அனுப்பவேண்டும் என்றும், உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு பதில் மனுத்தாக்கல்

ஏற்கனவே முடிவு செய் யப்பட்ட சட்ட வழிமுறை களை சீர்குலைக்கும் வகை யில் குடியரசுத்தலைவர் மூலம் மனுத்தாக்கல் செய் துள்ளார் என்றும், உச்சநீதி மன்ற தீர்ப்பை மீறும் வகை யில் குடியரசுத்தலைவர் மூலம் இந்த கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளது என் றும் தமிழ்நாடு அரசின் பதில் மனுவில் குறிப்பி டப் பட்டுள்ளது.

குடியரசு தலைவர் மூலம் எழுப்பியுள்ள கேள்விக ளுக்கு, ஆளுநருக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கில் வழங்கியுள்ள தீர்ப்பில் விரி வாக பதிலளிக்கப்பட்டுள் ளது என்றும் அதில் குறிப்பி டப்பட்டுள்ளது.

இதேபோன்று கேரள அரசு பதில் மனுத்தாக்கல் செய்துள்ளது. அதில், மாநில அரசுகள் நிறைவேற்றும் மசோதாக்கள் மீது முடிவெ டுக்க ஆளுநர்கள் மற்றும் குடியரசு தலைவருக்கு காலக்கெடு நிர்ணயித்து உச் சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சரியானது. குடியரசுத் தலைவர் கேட்டுள்ள 14 கேள்விகளில் 11 கேள்விக ளுக்கு தீர்ப்பிலேயே பதில் உள்ளது.

இந்தத் தீர்ப்பை வேண்டு மென்றே தவிர்த்துவிட்டு ஜனாதிபதி எழுப்பிய கேள் விகள், நீதிமன்ற தீர்ப்பை மறைமுகமாக ரத்து செய்ய முயல்வதாக இருக்கிறது. எனவே விளக்கம் கேட்டு ஜனாதிபதி அனுப்பிய குறிப்பை திருப்பி அனுப்ப வேண்டும் என கேரள அரசு தெரிவித்துள்ளது.

### உயர் சிறப்பு முதுநிலை மருத்துவப் படிப்புகளில் உள்ள

# 24 காலியிடங்களை நிரப்புவதற்கு நீட்டிக்கப்பட்ட கலந்தாய்விற்கு அனுமதி அளித்திடுக!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் – ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் கோரிக்கை!

சென்னை, ஜுன் 29

உயர் சிறப்பு முதுநிலை மருத்துவப் படிப்புகளில் காலியாக உள்ள 24 காலியி டங்களை நிரப்புவதற்கு, அர சுப் பணியில் உள்ள மருத்து வர்களுக்கு நீட்டிக்கப்பட்ட சுற்று கலந்தாய்வை நடத்திட அனுமதிக்க வேண்டும் என்று ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சருக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் எழுதிய கடி தத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர் ஜகத் பிரகாஷ் நட்டா அவர் களுக்கு எழுதிய நேர்முக கடி தம் வருமாறு:-

தமிழ்நாட்டில் அரசுப் பணியில் உள்ள மருத்துவர்க ளுக்கு ஒதுக்கப்பட்ட உயர் சிறப்பு முதுநிலை மருத்துவ படிப்புகளில் இடங்களை ஒப்படைப்பு செய்வது தொடர்பாக 11.06.2025 தேதியிட்ட கடிதத்தை நான் ஏற்கனவே அனுப்பியிருந் தேன்.

உச்சநீதிமன்றத்தின் ஆணையின்படி, தமிழ்நாட் டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில், உயர் சிறப்பு முதுநிலை மருத்துவ படிப்பு களில் 50 விழுக்காடு இடங் கள் தமிழ்நாட்டில் அரசுப் பணியில் உள்ள மருத்துவர்க ளுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனி னும், அரசுப் பணியில் உள்ள மருத்துவர்களுக்கான 24 பணியிடங்கள் காலியாக உள்ளன. விடுபட்ட சுற்றில் தரமுயர்த்தலை அனுமதிக் கின்ற 21.06.2025 தேதியிட்ட DGHS அறிவிப்பு உட்பட, கலந்தாய்வு வழிகாட்டுதல்க ளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக, இந்த காலியி டங்களை நிரப்ப, கூடுதல் சுற்று கலந்தாய்வு கோரி தேர்



வுக் குழுவுக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

எனவே, உயர் சிறப்பு முது நிலை மருத்துவ படிப்புகளில் காலியாக உள்ள 24 காலியி டங்களை நிரப்புவதற்கு, அர சுப் பணியில் உள்ள மருத்து வர்களுக்கு நீட்டிக்கப்பட்ட சுற்று கலந்தாய்வை நடத்த வும், இந்த செயல்முறையை 2025 ஆகஸ்ட் 5ஆம் தேதி அல்லது அதற்கு முன்னர் முடிக்கவும், மாநில அரசை அனுமதிக்குமாறு தாங்கள் தனிப்பட்ட முறையில் தலை யிட்டு உறுதி செய்யவேண் டும் என்று கேட்டுக் கொள்கி றேன்.

இது, தமிழகம் முழுவதும் உள்ள அரசு மருத்துவ நிலை யங்களில் நிபுணர்களின் எண் ணிக்கையை வலுப்படுத்த உதவும். தங்களது அன்பான ஒத்துழைப்பையும் சாதக மான ஆதரவையும் வேண்டு கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தனது கடிதத்தில் கேட்டுக் கொண் டுள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்"!

## 30.07.25 முதல் 10.08.25 வரை நடைபெறும் இடங்கள்! அமைச்சர்– பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை,ஜுலை.29-

"அன்னம் தரும் அமுத கரங்கள்" கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வரு மாறு:

**நாள் 30.7.25 புதன்கிழ மை 161 ஆம் நாள் அம்பத்தூர் வடக்கு பகுதி**

1) வட்டம் 79 அ, மாசிலா மணி ஈஸ்வரர் தெரு சந்திப்பு ஏரிக்கரை பிரதான சாலை வெங்கடேஸ்வரா நகர் வட்ட செயலாளர் பு.வீரா (எ) வீர்ரா கவன் 2) வட்டம் 79, காந்தி நெடுஞ்சாலை, காந்திநகர் சுகா தார நிலையம் அருகில், ஒரக டம் அம்பத்தூர். வட்ட செய லாளர் வே. ரவிந்திரன்

**நாள் 31.7.25 வியாழக் கிழமை 162 ஆம் நாள் திரு. வி.க நகர் தெற்கு பகுதி**

1) வட்டம் 73, பழைய வாழை மாநகர் சாலை, பழைய தபால் நிலையம் எதிரில், ஓட் டேரி நிகழ்ச்சி நடத்துபவர்: வட்ட துணை செயலாளர் அ. மூவேந்தன்

2) வட்டம் 75 அ, சின்ன பாபு தெரு, 5 விளக்கு அருகில், நம்மாழ்வார் பேட்டை தலைமை பொறுப்பாளர் பா.பி. தாஸ்

**நாள் 1.8.25 வெள்ளிக்கி ழமை 163 ஆம் நாள் வில்லி வாக்கம் மேற்கு பகுதி**

1) வட்டம் 94 அ, பாலியம் மன் கோயில் தெரு, வட்ட செயலாளர் ஆர் தீனதயாளன்

2) வட்டம் 94, சிட்கோ நகர், நான்காவது பிரதான சாலை, வட்ட செயலாளர் சிட்கோ சேகர்

**நாள் 2.8.25 சனிக்கிழமை 164 ஆம் நாள் கொளத்தூர் மேற்கு பகுதி** 1) வட்டம் 65 லட்சுமி அம்மன் கோயில், வட்ட செயலாளர், N.சௌந் தர் 2) வட்டம் 65 அ ரெட் டேரி சந்திப்பு, கங்கை அம்மன் கோயில் தெரு, வட்ட செய லாளர் N.பவுல்ராஜ்

**நாள் 3.8.25 ஞாயிற்றுக்கி ழமை 165 ஆம் நாள்**

**அம்பத்தூர் கிழக்கு பகுதி**

1) வட்டம் 84 அ, விநாயகர் கோயில் தெரு, கொரட்டூர், வட்ட செயலாளர் த. வ. லால்

2) வட்டம் 84, கொரட்டூர் பேருந்து நிலையம் அருகில், வட்ட செயலாளர் மூ. விஜய குமார்

**நாள் 4.8.25 திங்கட் கிழமை 166 ஆம் நாள் எழும்பூர் வடக்கு பகுதி** 1) வட்டம் 77 அ, மோதிலால் தெரு, விநாய கர் கோயில் அருகில், புளியந் தோப்பு. வட்ட செயலாளர் வி. அபாய் 2) வட்டம் 78அ, குறவன் குளம், சூளை. வட்ட செயலாளர் ந. பாலு

**நாள் 5.8.25 செவ்வாய்க்கி ழமை 167 ஆம் நாள்**

**அம்பத்தூர் தெற்கு பகுதி**

1) வட்டம் 88, கலைவா ணர் நகர், மகாலட்சுமி தெரு, வட்ட செயலாளர் சி. சீனிவா சன், வர்த்தக அணி துணை அமைப்பாளர் சி. ரகோத்தமன்

2) வட்டம் 89, இளங்கோ நகர் பூங்கா டிவிஎஸ் காலனி, மாமன்ற உறுப்பினர் அலுவல கம், வட்ட செயலாளர் M.E சேகர், MC.

**நாள் 6.8.25 புதன்கிழமை 168 ஆம் நாள் திரு.வி.க நகர் வடக்கு பகுதி**

1) வட்டம் 71, வடிவேல் தெரு, வெள்ளையன் மார்க் கெட் அருகில், பெரம்பூர் வட்ட செயலாளர், பரிமளா சுரேஷ் பாபு

2) வட்டம் 74 அ, கிருஷ்ண தாஸ் சாலை, வாழைமா நகர் (டாக்டர் அம்பேத்கர் சிலை அருகில் ) வட்ட செயலாளர் G.கிருஷ்ண குமார்

**நாள் 7.8.25 வியாழக் கிழமை 169 ஆம் நாள் எழும் பூர் தெற்கு பகுதி**

1) வட்டம் 61, மகப்பேறு மருத்துவமனை, பாந்தியன் சாலை வட்ட செயலாளர் டால்பின் ஹரி. 2) வட்டம் 61 அ, வேலாயுதம் தெரு, பழைய நூர்ஜகான் ஹோட்டல், புதுப் பேட்டை வட்ட செயலாளர், இ. மொய்தீன்

**நாள் 8.8.25 வெள்ளிக்கி ழமை 170ஆம் நாள் துறைமு கம் தொகுதி** 1) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54 அ, பி.கே.ஜி.தெரு, அண்ணா பிள்ளை தெரு. வட்ட செயலா ளர், பா.கதிரவன்.

2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 56 அ, சாலை விநாயகர் கோயில் தெரு வள் ளுவர் நகர் அருகில், வட்ட செயலாளர் M.பரத் குமார்

**நாள் 9.8.25 சனிக்கிழமை 171 ஆம் நாள் கொளத்தூர் கிழக்கு பகுதி**

1) வட்டம்-67, மதுரை சாமி மடம் மெயின் தெரு, செயின்ட் மேரிஸ் பள்ளி அரு கில். வட்டச் செயலாளர் N. பொன்முடி 2. வட்டம்- 68அ, K.C. கார்டன், 2 வது தெரு, பெரவள்ளூர், வட்டச் செயலாளர், PTC. S. ரவி,

**நாள் 10.8.25 ஞாயிற்றுக்கி ழமை 172 ஆம் நாள் வில்லி வாக்கம் கிழக்கு பகுதி**

1) வட்டம் 97, P.E கோயில் வடக்கு மாடவீதி மெயின் தெரு சந்திப்பு (ஜாய்ஸ் ஸ்டோர்) வட்ட செயலாளர் விக்னேஷ் சீனிவாசன்

2) வட்டம் 97 அ, செட்டி தெரு, முத்தம்மன் கோயில் தெரு சந்திப்பு, வட்ட செயலா ளர் ச.மனோகரன்

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சி யில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, எஸ்.முரளி, ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகு மார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு மாவட்டச் செய லாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.

### ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ.மணி தலைமையில்

# குன்றத்தூர் மத்திய ஒன்றிய தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் தா. மோ. அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்!

காஞ்சிபுரம், ஜுலை 29

குன்றத்தூர் மத்திய ஒன்றிய கழகப் பொறுப்பாளர் திருமுடி வாக்கம் இ.மணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

குன்றத்தூர் மத்திய ஒன் றிய திமுக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று (29.7.2025) மாலை 5 மணி அளவில் சோமங்கலம் மீனாட்சி மஹாலில் எனது (குன்றத்தூர் மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் திருமு டிவாக்கம் இ.மணி) தலைமை யில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் காஞ்சிபு ரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் குரு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன் சிறப்புரை யாற்று கிறார்.

திருபெருமந்தூர் சட்டமன் றத் தொகுதி பொறுப்பாளர் மீஞ்சூர் பாஸ்கர் சுந்தரம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ. மனோகரன்

ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தே மாதரம், ஒன்றியக்குழு துணைத் தலை வர் திருமதி உமா மகேஸ்வரி,

ஒன்றியக்கழக நிர்வாகிகள் ஏ. சுப்பிரமணி, வாசுகி மகேஷ், வே.ஹரி, மா. பரிமே லழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகி கள், கிளைக் கழகச் செயலா ளர், உள்ளாட்சி மன்றப் பிர திநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர் கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழகத் தலைவர் திராவிட மாடல் முதல்வர் தளபதி அவர்கள்

9.8. 2025 வருகை, ஓரணி யில் தமிழ்நாடு கழக உறுப்பி னர் சேர்த்தல், 2026 சட்டமன் றத் தேர்தல், கழக வளர்ச்சிப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித் துள்ளார்.

### சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்!

## இன்று (29.07.2025) 6 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை, ஜுலை 29 -

பெருநகர சென்னை மாநக ராட்சிப் பகுதிகளில் உங்களு டன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று (29.07.2025) திருவொற் றியூர் மண்டலம், வார்டு-4ல் எர்ணாவூர், மகாலட்சுமி நகரில் உள்ள பெருந்தலைவர் காமரா ஜர் மாளிகை, தண்டையார் பேட்டை மண்டலம், வார்டு- 45ல் வியாசர்பாடி, டாக்டர் அம்பேத்கர் கல்லூரி, அம்பத் தூர் மண்டலம், வார்டு-82ல் கள்ளிக்குப்பம், ரெட்ஹில்ஸ் சாலையில் உள்ள சத்யா மஹால், அண்ணாநகர் மண்ட லம், வார்டு-97ல் அயனாவரம், சென்னை தொடக்கப்பள்ளி மைதானம், வளசரவாக்கம் மண்டலம், வார்டு-150ல் காரம் பாக்கம், ஜெயின் கோவில் தெருவில் உள்ள ஜெயின் பார்ட்டி ஹால், ஆலந்தூர் மண்டலம், வார்டு-164ல் பழ வந்தாங்கல், நேரு குடியிருப்புப் பகுதியில் உள்ள சமூகநலக் கூடம் ஆகிய 6 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக் கள் தங்கள் வார்டுகளில் நடை பெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று பயன்பெ றுமாறு கேட்டுக் கொள்ளப்ப டுகிறது.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட எல்லாபுரம் ஒன்றியம் தாமரைப்பாக்கம் கூட்டு சாலையில் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 30 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு அதிநவீன வசதி கொண்ட பேருந்து நிழற்குடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்கினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் கொடுவெளி தங்கம் முரளி, நிர்வாகிகள் பி. ஜி.முனுசாமி, கொடுவெளி எம்.குமார், அன்பு, வெங்கல் பாஸ்கர், டி.பாஸ்கர், சரத், ரகு, உள்பட கழக நிர்வாகிகள் போக்குவரத்து துறை அதிகாரிகள் பலர் உள்ளனர்.



பெருநகர சென்னை மாநகராட்சியின் துணை மேயர் மு.மகேஷ் குமார் , அடையாறு மண்டலம், வார்டு 169க்குட்பட்ட இரயில்வே பார்டர் 1வது தெருவில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.21.60 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டடப் பணியினை நேற்று (28.07.2025) அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்